# <u>கனடாவுக்கு ஆள் தேவை</u>

கனடாவின் ஜனத்தொகை முப்பத்தாறு மில்லியன்கள் (36 **millions**) என்று புள்ளி விவரக் கணக்கு மையத்தால் (**Department of Statistics**) இது வரை கூறப்பட்டு வந்தது. ஆனால் இப்போது வந்துள்ள புதிய கணக்கிடும் கணின முறைகளை வைத்து அலசிப் பார்த்தால், அதாவது **Big Data, GPS, Artificial Intelligence** ஆகியனவற்றை வைத்துப் புது முறையில் கணக்கிட்டுப் பார்த்தால் கனடாவின் சனத்தொகை முப்பத்தைந்து மில்லியன்கள் மட்டுமே (**only** 35 **millions**) என்று தெரிய வந்துள்ளது.

ஆனால் கனடாவில் முப்பத்தாறு மில்லியன் பேரை வாழவைக்கத் தேவையான **Infrastructures** (அதாவது சாலைகள், தகவல் தொடர்புச் சாதனங்கள், கல்விக் கூட இணைப்பமைவுகள்) ஏற்கனவே உள்ளன. எனவே இப்போது செய்வோம் என்று நினைத்தால் கூட போதும். கனடிய நாட்டின் அரசாங்கம் ஒரு மில்லியன் பேரை, அதாவது பத்து லட்சம் ஆட்களை, நாட்டுக்குள் கொண்டு வந்து எளிதாகக் குடி புகுத்தச் செய்யலாம்.

கனடாவில் ஆண்டு தோறும் இரண்டரை லட்சம் பேர் (250,000) பிரஜா உரிமை பெறுகிறார்கள். ஆனால் இந்நாட்டில் பிள்ளைகள் போதுமான அளவு பிறக்காததால், நாட்டின் சனத்தொகை ஆண்டு தோறும் ஒரு இலட்சம் தான் (100,000) கூடுகிறது. எனவே இப்போதிருக்கும் நிலை நீடித்தால் பத்து இலட்சம் பேரை நாட்டில் கொண்டு வந்து குடியமர்த்த இன்னும் நாங்கள் பத்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டி வரும்.

கனடா முடிவெடுத்தால் ஆண்டு தோறும் ஐந்து லட்சம் பேராவது குடியுரிமை பெறுமாறு ஏறபாடு செய்யலாமே, குடியுரிமை **Immigration** சட்டங்களைத் தளர்த்தி இன்னும் பல்லாயிரக் கணக்கான பேரை நாட்டிற்குள் கொண்டு வந்து சேர்க்கலாமே என்று பலரும் பேசிக் கொள்கின்றனர். நாட்டின் அரசாங்கமும் இதைப் பற்றி மிகவே சிந்தித்து வருவதாகக் கேள்வி.

பரிசுத்த தந்தை பாப்பரசர் **Francis** சொல்கிறார்: *“குடியுரிமை தேடி பிற நாடுகளுக்குச் செல்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் பணக்காரரோ ஏழையோ, அவர்கள் பல காரணங்களால் அங்குமிங்கும் அலைகழிக்கப் பட்டு, ஒளி மயமான எதிர் காலத்தை நோக்கி உலகெங்கும் சுற்றித் திரிகிறார்கள். அப்படி எதிர் காலத்தை நோக்கி நடை பயில அனைவருக்கும் மனிதர் என்ற முறையில் அடிப்படை உரிமை உள்ளது. இவ்வுண்மை உலக அரங்கில் பறை சாற்றப் பட வேண்டும். பிறர் மீது, இடுபாடும் இரக்கமும் மக்கள் உள்ளத்தில் வெள்ளமாகப் பாய்ந்தோடுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அகதிகளையும், குடியுரிமை கோரி வருபவர்களையும் புறம்பாகத் தள்ளி விடாமல் அவர்களுக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்ய எல்லா இடங்களிலும் மக்கள் முன் வர வேண்டும். இது நாடுகளை ஆளும் அரசாங்கங்களின் கடமையும் கூட.”*

பாப்பரசரின் இந்த ஆசிச் செய்தி அனைத்து உள்ளங்களையும் சென்றடைவதாக. எளியோர், இன்னலுற்றோர் பலர் இதனால் பயன் பெறவும், நாடுகள் வளமுறவும், உலகில் மகிழ்ச்சி பெருகவும் இறை அருள் கிட்டுவதாக.

கிறிஸ்துவில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**